சிகரத்தின்

# தினத்தென்றல்

SIGARATTHIN DHINATHENDRAL தமிழ் சமுதாயத்தின் குரல் TAMIL DAILY Rs. 4

Vol:13 ● Issue:355 15.10.2026 ● வியாழக்கிழமை ● சென்னை ● கோவை ● திருச்சி ● திருநெல்வேலி ● பக்கம் 6 ● விலை ரூ.4




**மிகக் குறைந்த விலையில் மருந்துகளை வழங்குகிறது இந்தியா**

**கோயில்களில் செல்போன் கொண்டு செல்ல தடை நீக்கம்!**

**எனிமி ஆப் தி ஸ்மக்ளர் படத்தின் டீசர் வெளியானது**














## தனியார் பள்ளிகள் விடுமுறை நாட்களில் வகுப்பு நடத்தினால் கடும் நடவடிக்கை

# 10, 12ம் வகுப்பு பொதுத் தேர்வு அட்டவணை வெளியீடு

**சென்னை, அக்.15:** 10, 11 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு 2026-27 கல்வியாண்டுக்கான பொதுத் தேர்வு கால அட்டவணையை பள்ளி கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் வெளியிட்டார்.

சென்னையில் அமைச்சர் ராஜ்மோகன் பொதுத்தேர்வு கால அட்டவணையை வெளியிட்டு பேசினார். அமைச்சர் நிருபர்களிடம் கூறியதாவது:

### 12ம் வகுப்புக்கான அட்டவணை

12ம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத்தேர்வு தமிழ் மற்றும் மொழிப்பாடத் தேர்வுடன் மார்ச் 3-ந்தேதி தொடங்கி மார்ச் 29 ந்தேதி வரை நடைபெறுகின்றன. செய்முறைத் தேர்வுகள் பிப்ரவரி 8 முதல் பிப்ரவரி 18 வரை நடைபெறுகின்றன.

### மார்ச் 3 தொடக்கம்

தமிழ் - 03.03.2027.
ஆங்கிலம் - 09.03.2027
வேதியியல் - 12.03.2027
உயிரியல் - 19.03.2027
இயற்பியல் - 23.03.2027
கணிதம் - 29.03.2027
கணக்குப் பதிவியல் - 12.03.2027
கணினி அறிவியல் -15.03.2027
வரலாறு - 19.03.2027
பொருளியல் - 23.03.2027
விலங்கியல் - 29.03.2027
புவியியல் - 12.03.2027

**○ அமைச்சர் ராஜ்மோகன் பேட்டி**




கணினி பயன்பாடு - 15.03.2027
உயிர் வேதியியல் - 15.03.2027
அரசியல் அறிவியல் - 15.03.2027
புள்ளியியல் - 15.03.2027
வணிக கணிதம் - 19.03.2027
வணிகவியல் - 29.03.2027
நுண்ணுயிரியல் - 29.03.2027
ஊட்டச்சத்து,
உணவுமுறை - 29.03.2027
வேளாண் அறிவியல் - 29.03.2027
நர்சிங் (பொது) - 29.03.2027
உணவு சேவை
மேலாண்மை - 29.03.2027

### 11ம் வகுப்பு அட்டவணை

11ம் வகுப்பு (அரியர்) மாணவர்களுக்கான பொதுத்தேர்வுகள் மார்ச் 5-ந்தேதி தொடங்கி ஏப்ரல் 1-ந்தேதி வரை நடைபெறுகின்றன. 11 மற்றும் 12ம் வகுப்பு தேர்வுகளுக்கான முடிவுகள் மே 7-ல் வெளியாக வாய்ப்புள்ளது.

### 10ம் வகுப்பு அட்டவணை

10ம்வகுப்பு மாணவர்களுக்கான பொதுத்தேர்வுகள் மார்ச் 17 முதல் ஏப்ரல் 12-ம் தேதி வரை நடைபெறுகின்றன. பிப்ரவரி 19 முதல் பிப்ரவரி 26 வரை செய்முறைத் தேர்வுகள் நடைபெறுகின்றன. 10ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவு மே 20-ல் வெளியாக வாய்ப்புள்ளது.

தமிழ் பாடம் - 17.03.2027
ஆங்கில பாடம் - 25.03.2027
கணிதம் - 31.03.2027
அறிவியல் - 05.04.2027
சமூக அறிவியல் - 09.04.2027
விருப்ப மொழி 12.04.2027

நடப்பு கல்வியாண்டில் சுமார் 15 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ்-2 பொதுத்தேர்வுகளை எழுத இருக்கின்றனர். பொதுத் தேர்வெழுதும் மாணவ, மாணவிகளுக்கு வாழ்த்துகள்.

தனியார் பள்ளிகளில் 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை வகுப்பு நடத்தினால் கட்டாயமாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.




சிகரத்தின்
தினத்தென்றல்

## திசையன்விளை கோல்டு ஸ்டார் பள்ளியில்

# விளையாட்டு போட்டிகள்: காவல் ஆய்வாளர் பங்கேற்பு



**திசையன்விளை, அக்.15:** ஸ்ரீ கோல்டு ஸ்டார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பள்ளியின் தாளாளர் 60 -வது பிறந்த நாளை முன்னிட்டு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது.

பள்ளியின் தாளாளர் சு.கணேசன் விழாவில் தலைமை ஏற்றார்.சிறப்பு விருந்தினராக திசையன்விளை காவல் ஆய்வாளர் எழில் சுரேஷ் சிங் அவர்களும் மற்றும் முதுமொத்தன்மொழி பஞ்சாயத்து தலைவர் .ஆனந்த குமார் ஆகியோர் பங்கேற்றனர். சிறப்பு விருந்தினர்களுக்கு பள்ளியின் தாளாளர் நினைவுப் பரிசுகள் வழங்கினார் .

காவல் ஆய்வாளர் மாணவர்களுக்கு ஒழுக்கம் பற்றிய கருத்துகளை எடுத்துரைத்தார்.

மாணவர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் விதமாக கேரம் ,சேஸ்,விளையாட்டுகள் நடைபெற்றன. இப்போட்டியில் 50-க்கும் மேற்பட்ட பள்ளிகள் பங்கேற்றன.விழாவின் ஆரம்பமாக விளையாட்டுத் துறையில் மாநில அளவில் சென்ற மாணவர்களுக்கு பள்ளியின் தாளாளர் பரிசு கோப்பைகள் வழங்கினார்.

அதைத் தொடர்ந்து வாலிபால் போட்டியில் வெற்றிபெற்ற குழுவிற்கு முதல் பரிசாக ரூ.5000, இரண்டாம் பரிசாக ரூ.3000 மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.2000 பள்ளியின் தாளாளர் வழங்கினார்.மேலும் கேரம் ,செஸ்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் முதல் பரிசாக ரூ.1000,இரண்டாம் பரிசாக ரூ.700 மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.500 வழங்கப்பட்டது.

## மருத்துவமனைகளில் சிகிச்சை

# கட்டணங்களை காட்சிப்படுத்த உத்தரவு




**சென்னை, அக்.15:** மருத்துவமனைகளில் சிகிச்சை கட்டணங்களை வெளிப்படையாக காட்சிப்படுத்த வேண்டும் என்று மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய சுகாதாரத் துறை செயலர் புன்ய சலிலா ஸ்ரீவஸ்தவா, அனைத்து மாநில தலைமை செயலர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது: மருத்துவமனைகளில் வெளிப்படைத் தன்மை கொண்டு வந்தால், நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் சிகிச்சைக்கான செலவை முன்கூடியே திட்டமிடுவார்கள்.

கட்டணம் தொடர்பான தேவையற்ற குழப்பங்ளை தவிர்க்க முடியும். மருத்துவ சேவைகள் மீது பொது மக்களின் நம்பிக்கையை அதிகரிக்கும். அதனால், மருத்துவ நிறுவனங்கள் சட்டம் அமலில் உள்ள மாநிலங்களில், ஒவ்வொரு சேவைக்கான கட்டண விபரங்கள் ஆங்கிலம் மற்றும் அந்தந்த உள்ளூர் மொழியில் பொதுமக்கள் எளிதில் பார்க்கும் இடத்தில் காட்சிப்படுத்த வேண்டும்.

மாநில பட்டியலில் சுகாதாரம் இருப்பதால், இவை முறையாக பின்பற்றப்படுகிறதா என்பதை தலைமைச் செயலர்கள் தனிப்பட்ட முறையில் கண்காணித்து உறுதி செய்ய வேண்டும்.

அதேபோல், மருத்துவ சுற்றுலாவாக வரும் வெளிநாட்டு நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை கட்டணங்களையும் வெளிப்படையாக காட்சிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## க்ரைம் கார்னர்

### ஆன்லைன் டிரேடிங்கில் முதலீடு வீடியோ வெளியிட்டு மோசடி: 3 பேர் கைது!

**சென்னை, அக்.15:** ஆன்லைன் டிரேடிங்' பயிற்சி அளிப்பதாக கூறி தலா ஒருவருக்கு 40 ஆயிரம் ரூபாய் வீதம் 6 கோடி ரூபாய் மோசடி செய்த, சென்னை திருவேற்காடு பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய கல்லூரி நண்பர்களான கவின் பிரசாத், கீர்த்திவாசன் மற்றும் பார்த்திபன் ஆகிய 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மூவரும் 'இன்ஸ்டா' சமூக வலைதளத்தில் 40 ஆயிரம் ரூபாய் கட்டணத்தில், 'டிரேடிங்' குறித்து கற்றுத் தருவதாக விளம்பரம் செய்துள்ளனர்.பேட்ச் ஒன்றிற்கு 40 முதல் 50 பேரை சேர்த்து, கோவளம், முட்டுக்காடு, கொடைக்கானல், புதுச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் ரிசார்ட்டை மொத்தமாக ஏழு நாட்கள் வாடகைக்கு எடுத்து, ஒரு அறைக்கு 10 பேர் வீதம் தங்க வைத்து ஆன்லைன் டிரேடிங் கற்றுக்கொடுத்துள்ளனர்.

ஆர்.பி.ஐ.யால் தடை செய்யப்பட்ட கிரிப்டோ கரன்சிகளால் முதலீடு செய்ய வைத்துள்ளனர். சட்டவிரோதமாக முதலீடு செய்து பல கோடி ரூபாய் சம்பாதித்துள்ளனர்.

### ஜெம் கிரானைட் வீரமணிக்கு எதிரான வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றக் கோரிய மனு தள்ளுபடி!!

**சென்னை, அக்.15:** ஜெம் கிரானைட் நிறுவன உரிமையாளர் வீரமணிக்கு எதிரான வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றக் கோரிய மனுவை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

சென்னையைச் சேர்ந்த வழக்கறிஞர் சி.ராஜசேகரன் தாக்கல் செய்த பொதுநல வழக்கை, மனுதாரரே திரும்பப் பெற்றதை அடுத்து நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. வழக்கின் விசாரணையின்போது, ஏற்கனவே சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கை இப்போது தாக்கல் செய்ய வேண்டிய அவசிய அல்லது நிர்பந்தம் என்ன? என்று மனுதாரரிடம் ஐகோர்ட் தலைமை நீதிபதி கேள்வி எழுப்பியது.

## திசையன்விளை பேரூராட்சியில்

# ஆழ் துளை கிணறு குடிநீர் திட்டம்: பேரூராட்சி தலைவி ஜான்சி ராணி தொடங்கி வைத்தார்



**திசையன்விளை, அக்.15:** திசையன்விளை சிறப்பு நிலை பேரூராட்சி 18 வது வார்டு பவித்ரா நகரில் பேரூராட்சி பொது நிதியின் கீழ் ரூ 4 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கும் பணியை திசையன்விளை சிறப்பு நிலை பேரூராட்சி தலைவர். ஜான்சிராணி தலைமை வகித்து தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் கவுன்சிலர்கள் தனசீலி புவனேஸ்வரி, சண்முகவேல், பிரேம்குமார் மற்றும் 9 வது வார்டு செயலாளர் ஆர். எஸ். ராஜா, பிரதீப் ஸ்வீட்ஸ் அதிபர் முருகானந்தம் , லிங்க துரை,பிரகாஸ் ,பிஎல்ஆர் லிங்க ராஜ் மற்றும் வார்டு பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## மத்திய அமைச்சர், எம்.பி. பதவியை

# ராஜினாமா செய்தார் எல்.முருகன்



**சென்னை, அக்.15:** தமிழகத்தில் பாஜகவை வலுப்படுத்தும் நோக்கில், எல்.முருகன் தனது மத்திய இணை அமைச்சர், எம்.பி. பதவியை ராஜினாமா செய்து பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

கடந்த 2020-ம் ஆண்டு மார்ச் 12-ம் தேதி தமிழக பாஜக மாநிலத் தலைவராக எல்.முருகன் நியமிக்கப்பட்டார். அதே ஆண்டு தமிழகத்தில் பாஜக சார்பில் நடைபெற்ற வேல் யாத்திரையை இருமுறை முன்னின்று நடத்தினார். அப்போது, இரண்டு முறையும் தமிழக அரசால் கைது செய்யப்பட்டார். 2021-ம் ஆண்டு நடைபெற்ற தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தாராபுரம் தொகுதியில் போட்டியிட்ட அவர், திமுக வேட்பாளரிடம் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

இருப்பினும், அவர் மாநிலத் தலைவராக இருந்தபோது பாஜக சார்பில் போட்டியிட்ட 4 பேர் சட்டப்பேரவை உறுப்பினர்களாகத் தேர்வாகினர். இதையடுத்து, மத்திய பிரதேச மாநிலத்தில் இருந்து மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு, 2021-ம் ஆண்டு ஜூலை 7-ம் தேதி மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை, தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை ஆகியவற்றின் இணை அமைச்சராக எல்.முருகன் பொறுப்பேற்றார்.

தொடர்ந்து, 2024-ம் ஆண்டிலும் மத்திய பிரதேசத்தில் இருந்து மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட அவர், மத்திய இணை அமைச்சராகப் பணியாற்றி வருகிறார். இந்நிலையில், தமிழகத்தில் கட்சிப் பணிகளில் முழுமையாக ஈடுபட விரும்பி, தனது பதவிகளில் இருந்து விடுவிக்கக் கோரி பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் கட்சியை வலுப்படுத்தும் பணியில் முழுநேரமாக ஈடுபடுவதற்காக, மத்திய இணை அமைச்சர் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் பதவிகளில் இருந்து என்னை விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தின் ஒவ்வொரு கிராமத்துக்கும், வீதிக்கும் சென்று மக்களைச் சந்தித்து, கட்சித் தொண்டர்களுடன் இணைந்து மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பாஜகவின் வளர்ச்சியை விரிவுபடுத்த விரும்புகிறேன். மேலும், 2029 மக்களவைத் தேர்தலுக்குக் கட்சியைத் தயார்படுத்தி, தங்களின் தலைமையில் தமிழகத்தில் இருந்து அதிக இடங்களில் வெற்றி பெறுவதற்காக எனது முழு நேரத்தையும் ஆற்றலையும் அர்ப்பணிக்க விரும்புகிறேன். கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தங்களின் தலைமையிலான அரசில் பணியாற்ற வாய்ப்பளித்ததற்கு நன்றி. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 1,000 ரேஷன் அட்டைகளுக்கு 50 கிலோ வெங்காயம் சப்ளை

# ஒரு கார்டுக்கு 50 கிராம் கூட கிடைக்காது: ஊழியர்கள் திணறல்!



**மதுரை, அக்.15:** கூட்டுறவுத்துறை சார்பில் நடத்தப்படும் ரேஷன் கடைகளுக்கு 1,000 அட்டைதாரர்களுக்கு 50 கிலோ வெங்காயம் மட்டுமே வழங்கப்படுகிறது. ஒரு கார்டுக்கு 50 கிராம் அளவே இருப்பதால், சமாளிக்க முடியாமல் ஊழியர்கள் திணறுகின்றனர்.

வெங்காயம் உற்பத்தி குறைந்ததால் சந்தைகளுக்கு வரத்தும் குறைந்துள்ளது. இதனால் சின்ன வெங்காயம், பெரிய வெங்காயத்தின் விலையும் உயர்ந்துள்ளது. சின்ன வெங்காயம் ஒரு கிலோ ரூ. 110-ல் ருந்து ரூ.120 வரை விற்கப் படுகிறது. இதனால் பெரிய வெங்காயத்தை மக்கள் அதிகம் பயன்படுத்துவதால் அதன் தேவையும் அதிகரித்துள்ளது.

இதனால் வெளிச்சந்தையில் கூடுதல் விலைக்கு வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே ரேஷன் கடைகளில் வெங்காயம் விநியோகிக்கப் படுகிறது. ஆனால் குறைந்த அளவு சப்ளை செய்யப்படுவதால், அதை சரியாக விநியோகிக்க முடியாமல் ஊழியர்கள் திணறி வருகிறார்கள்.

இதுகுறித்து குடும்ப அட்டைதாரர்கள் கூறுகையில்,' வெளி மார்க்கெட்டில் ஒரு கிலோ ரூ.65-க்கு விற்கப்படுகிறது. ரேஷன் கடைகளில் ரூ.35-க்கு விற்கின்றனர். 1,000 ரேஷன் அட்டைதாரர்களுக்கு வெறும் 50 கிலோ மட்டும் வழங்குகின்றனர். ஒரு கார்டுக்கு 50 கிராம் என்ற அளவில் தான் உள்ளது.

கார்டுக்கு ஒரு கிலோ வழங்கும் போது, மீதமுள்ள 950 பேருக்கு கிடைக்கவில்லை. எனவே, அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் கிடைக்கும் வகையில் தரமான வெங்காயம் வழங்க வேண்டும்' என்று கூறினார்.

இது குறித்து கூட்டுறவுத் துறையினர் கூறுகையில், 'மதுரை மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை மூலம் கிராமங்கள், நகர் பகுதிகளில் 1,409 ரேஷன் கடைகள் உள்ளன. இதில் நகர் பகுதியிலுள்ள 481 கடைகளுக்கு மட்டும் மாதத்துக்கு 30 டன் வெங்காயம் வழங்கி உள்ளோம்.

கடந்த செப்டம்பரில் மாவட்டம் முழுவதும் 120 டன் வெங்காயம் வழங்கினோம். அரசு எவ்வளவு தருகிறதோ, அதனை கடைகள் வாரியாக பிரித்து அனுப்புகிறோம்.

தேவை அதிகரித்துள்ளதால் விஜயதசமி முடிந்த பின்பு, கிராமப்புறங்களிலுள்ள கடைகளுக்கு வழங்க உள்ளோம். குறைந்த அளவிலேயே வழங்கப்படுவதால், ஊழியர்கள் மிகுந்த சிமரத்திற்குள்ளாகின்றனர்' என்று கூறினர்.

## பாம்பு கடித்து வியாபாரி உயிரிழப்பு

# கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் எம்.பி. ஆய்வு!



**தென்காசி, அக்.15:** தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் பாம்பு கடித்து உயிரிழந்த 66 வயது வியாபாரி சுடர்மணியின் மரணம் தொடர்பாக, தென்காசி எம்.பி. ராணி ஸ்ரீகுமார் அரசு மருத்துவமனையில் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

மருத்துவ அலட்சியம் காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டதாக உறவினர்கள் புகார் தெரிவித்த நிலையில், இரண்டு செவிலியர்களிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது.

இனி இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் மருத்துவர்கள் கவனத்துடன் செயல்பட வேண்டும் என்றும், நோயாளிகளுக்கு விரைவான சிகிச்சை வழங்க வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்றும் எம்.பி. வலியுறுத்தினார்.

மேலும், மருத்துவமனையை நான்கு மாடிக் கட்டடமாக மேம்படுத்தும் திட்டம் குறித்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்வதாகத் தெரிவித்தார்.

# வீரமணி வழக்கு: மேலும் 2 பெண் அதிகாரிகளிடம் விசாரணை

**சென்னை, அக்.15:** சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் தொழிலதிபர் வீரமணி, உதவியாளர் சாந்தி, கணவர் மகேந்திர சிம்மன், முன்னாள் உதவியாளர் கணேசன் மற்றும் கார் ஓட்டுநர்கள் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டனர். கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறுமிகளைக் குறி வைத்து வீரமணி பாலியல் வன்கொடுமை செய்தது அம்பலமானது.

சென்னை மத்திய குற்றப் பிரிவு கூடுதல் காவல் ஆணையர் தேன்மொழி தலைமையில் அமைக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுக் குழு நடத்திய விசாரணையில், இதுவரை 10 சிறுமிகள் பாதிக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டது.

இதுதொடர்பாக வீரமணி மீது 7 போக்சோ வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் 3 வழக்குகளில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், ஜெம் வீரமணி வழக்கைக் கையாள்வதில் ஏற்பட்ட தாமதம், புகார் மீது நடவடிக்கை எடுக்காதது உள்ளிட்டவை குறித்து முன்னாள் சென்னை காவல் ஆணையர் அருண், முன்னாள் கூடுதல் ஆணையர் கண்ணன் ஆகியோரிடம் சிறப்புப் புலனாய்வுக் குழுவினர் 3 மணி நேரம் விசாரித்தனர்.

இதேபோல், புகார் அளிக்கப்பட்ட காலத்தில் சென்னை மத்திய குற்றப்பிரிவு காவல் கூடுதல் ஆணையராக இருந்த ராதிகா, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்புப் பிரிவு துணை ஆணையராக இருந்த வனிதாவிடமும் விசாரணை நடத்தப்பட்டது.

புகார் காலத்தில் ராதிகா நீண்ட விடுப்பில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சிறப்புப் புலனாய்வுக் குழு தனது அடுத்தகட்ட விசாரணை அறிக்கையை வரும் 27-ம் தேதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளது.

## விரைவில் பணக்காரராக ஆசை: கஞ்சா விற்ற 3 இளைஞர்கள் கைது

**பல்லாவரம், அக்.15:** திருநீர்மலை சுடுகாடு அருகே நேற்று 3 இளைஞர்கள் சந்தேகத்துக்கிடமான வகையில் சுற்றித்திரிவதாக சங்கர் நகர் போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து அங்கு சென்ற போலீஸார், 3 பேரையும் பிடித்து விசாரித்தனர்.

அதில் சுமார் ஒன்றரை கிலோ கஞ்சா இருந்தது தெரியவந்தது. இதையடுத்து கஞ்சா, 2 செல்போன்களைப் பறிமுதல் செய்த போலீஸார், 3 பேரையும் கைதுசெய்து விசாரித்தனர். விசாரணையில் கைது செய்யப்பட்டவர்கள் அனகாபுத்தூர் கஸ்தூரிபாய் நகரைச் சேர்ந்த ராஜா (25), ஸ்டீபன் ராஜ் (28), பல்லாவரம் கண்டோன்மென்ட் பாரத் நகரைச் சேர்ந்த நிர்மல் ராஜ் (24) என்பது தெரியவந்தது. விரைவில் பணக்காரர்களாகிவிடலாம் என்ற ஆசையில் ஆந்திராவிலிருந்து மொத்தமாக கஞ்சாவை வாங்கி வந்து, போலீஸாரிடம் சிக்கியுள்ளனர். 3 பேர் மீதும் வழக்குப் பதிவுசெய்த போலீஸார், அவர்களை தாம்பரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

### மெட்ரோ 2–ம் கட்ட திட்டத்தில் 5–வது தடத்தில்

## 100% கட்டுமானப் பணிகள் நிறைவு!

**சென்னை, அக்.15:** சென்னை மெட்ரோ ரயில் 2-ம் கட்ட திட்டத்தில் 5-வது வழித்தடத்தில் 100 சதவீதம் முன்கூட்டியே வார்க்கப்பட்ட கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

சென்னையில் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் 5-வது வழித்தடத்தில் உள்ளகரம் - சோழிங்கநல்லூர் வரை அமையவுள்ள உயர் மட்ட வழித்தடப் பகுதியில், முன்கூட்டியே வார்க்கப்பட்ட கான்கிரீட் கட்டுமானப் பணியில் இறுதி 'யு-கர்டர்' வார்க்கும் பணி வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது.




இதன் மூலம் அனைத்து முன்கூட்டியே வார்க்கப்பட்ட கூறுகளும் 100% நிறைவு செய்யப்பட்டு புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒட்டுமொத்தமாக 3,126 முன் கூட்டியே வார்க்கப்பட்ட கூறுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இதில் ஐ-கர்டர்கள் 1,041, யு கர்டர்கள் 892 ஆகியவை அடங்கும். வார்க்கப்பட்ட 892 யு-கர்டர்கள் மூலம், 2-ம் கட்டத் திட்டப் பணிகளிலேயே அதிக அளவில் யு-கர்டர்கள் தயாரித்த சாதனை இத்திட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த உள்கட்டமைப்பு பணிகளுக்காக 98,052 கன மீட்டர் கான்கிரீட், 18,550 மெட்ரிக் டன் கம்பிகள், 3,010 மெட்ரிக் டன் அதிவலிமை எஃகு கம்பிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இறுதி யு-கர்டர் வார்ப்புப் பணி நிறைவு விழாவில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் தி.அர்ச்சுனன், கூடுதல் பொது மேலாளர் ஆர். சீனிவாசன் உள்பட பல்வேறு உயர் அதிகாரிகள், பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

இறுதி யு-கர்டர் வார்ப்புப் பணி வெற்றிகரமாக முடிவடைந்ததைத் தொடர்ந்து, மீதமுள்ள யு-கர்டர்களைப் பொருத்தும் பணி மற்றும் மெட்ரோ நிலையங்களின் நுழைவு/வெளியேறும் அமைப்புகளின் கட்டுமானப் பணிகள் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

சென்னை மெட்ரோ ரயில் 2-ம் கட்ட திட்டம் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்படும் வகையில், பணிகள் விரைவாக முன்னேறி வருகின்றன என்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

### கலந்தாய்வின்றி வழங்கிய பணி

## ஆணைகளை ரத்து செய்ய அரசு மருத்துவர்கள் கூட்டத்தில் தீர்மானம்

**சென்னை, அக்.15:** அரசு மருத்துவர்கள் மற்றும் பட்டமேற்படிப்பு மருத்துவர்கள் சங்கத்தின் கூட்டம் காணொலியில் நடந்தது. சங்க நிர்வாகிகள், நடப்பாண்டு பட்டமேற்படிப்பு முடித்த, முடிக்கவிருக்கும் அரசு மருத்துவர்கள் (சர்வீஸ் பிஜி) கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு:

நடப்பாண்டில் பட்டமேற்படிப்பு முடிக்கும் (ஜூலை முதல் தற்போது வரையில்) அரசு சேவை மருத்துவர்களுக்கு கலந்தாய்வு இல்லாமல் பணி ஆணை வழங்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

தற்காலிக அல்லது நிரந்தர பணி மாறுதல் ஆணை எதுவாக இருப்பினும் அது வெளிப்படையான கலந்தாய்வின் மூலமே நடத்த வேண்டும். சர்வீஸ் சீனியர்களுக்கு மருத்துவக் கல்வித் துறையில் பணியிடங்கள் வழங்காமல், பணி இளையோருக்கு வழங்குவது எதிர்கால சிக்கல்களை உருவாக்கிடும்.

மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் பணியிடம் நிரப்பப்படாமல் இருப்பதும் தற்போதைய நிலைக்கு ஒரு காரணியாக உள்ளது. இதுபோன்ற நிர்வாக தவறுகளால், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தில் பல வழக்குகள் நீதிமன்றத்தில் உள்ளன.

கலந்தாய்வு இல்லாமல் வழங்கப்பட்ட ஆணைகளை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். கலந்தாய்வின் மூலமே தற்காலிக அல்லது நிரந்தர பணி ஆணைகளை பட்ட மேற்படிப்பு மருத்துவர்களுக்கு வழங்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### சைபர் மோசடி கும்பலிடமிருந்து தப்பிக்க

## முதியோருக்கு போலீஸார் விழிப்புணர்வு

**சென்னை, அக்.15:** சைபர் மோசடி கும்பலிடமிருந்து தப்பிப்பது எப்படி என்பது குறித்து சென்னையில் முதியோருக்கு சைபர் க்ரைம் போலீஸார் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.



இன்றைய டிஜிட்டல் உலகில் சைபர் மோசடிகள் வேகமாக அதிகரித்து வருகின்றன. போலி இணையதளங்கள், வங்கித் தகவல் திருட்டு, ஓடிபி மோசடி, சமூக வலைதள மோசடிகள் மூலம் பொது மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இத்தகைய பாதிப்புகளில் இருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள விழிப்புணர்வும், எச்சரிக்கையும் அவசியம். சந்தேகத்துக்கிடமான இணைப்புகளைத் தவிர்த்து, தனிப்பட்ட தகவல்களைப் பகிராமல் இருப்பது பாதுகாப்பானதாகும்.

பல சைபர் க்ரைம் குற்றங்கள் முதியோரை குறிவைத்தே நடக்கின்றன. உதாரணமாக சென்னையைச் சேர்ந்த 69 வயது ஓய்வுபெற்ற வங்கி ஊழியர் ஒருவரை தொடர்பு கொண்ட மர்மநபர், தங்களது நிறுவனத்தில் முதலீடு செய்தால் அதிக லாபம் கிடைக்கும் என்று கூறி நம்ப வைத்துள்ளார்.

இதன்பேரில் பல தவணைகளாக ரூ.3.40 கோடியை அந்த ஓய்வுபெற்ற வங்கி ஊழியர் இழந்தார்.

இதுகுறித்த புகாரின் பேரில் சைபர் கிரைம் போலீஸார் வழக்கு பதிந்து ஆந்திராவைச் சேர்ந்த கொனத்தலா கிருஷ்ணா என்பவரை கைது செய்தனர்.

இதுபோல சைபர் மோசடி கும்பல் வலையில் முதியோர் விழுந்து பணத்தை இழந்து விடுகின்றனர். இதை தடுக்கும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்த சென்னை காவல் ஆணையர் அமல்ராஜ் உத்தரவிட்டார்.

அதன்படி, சைபர் க்ரைம் ஆய்வாளர் உஷாராணி தலைமையில் நேற்று முன்தினம் மாலை நீலாங்கரை பகுதியில் உள்ள அதுல்யா முதியோர் பராமரிப்பு இல்லத்தில் சைபர் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இதில் முதியோரிடம், ஆன்லைன் முதலீட்டு மோசடிகள், ஆன்லைன் வர்த்தக மோசடிகள், இணையவழி பின்தொடர்தல், ஏமாற்றுதல், இணையவழி துன்புறுத்தல், டிஜிட்டல் கைது மோசடிகள், உயர் அதிகாரி, முதலாளி பெயரில் நடைபெறும் மோசடிகள், பரிசு மோசடிகள், கூரியர் மோசடிகள், புதிதாகத் தோன்றி வரும் பிற இணையவழி மோசடிகள் குறித்து துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும் முதியோர் சைபர் துன்புறுத்தல், மிரட்டல் அல்லது இணையவழி மோசடியை எதிர்கொண்டால் உடனடியாக சைபர் குற்ற உதவி எண் 1930-ஐ தொடர்புகொள்வது மற்றும் WWW.CYBERCRIME.GOV.IN என்ற தேசிய சைபர் க்ரைம் பிரிவில் புகார் அளிப்பது குறித்தும் விளக்கப்பட்டது.

### பருவநிலை மாற்றம் மற்றும் எல்நினோவின் தாக்கம் காரணமாக

## மேட்டூர் அணை நீர்மட்டம் 60 அடிக்கு கீழ் சரிவு

**சேலம், அக்.15:** பருவநிலை மாற்றம் மற்றும் எல்நினோவின் தாக்கம் காரணமாக மேட்டூர் அணையின் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இந்த ஆண்டு பருவமலை குறைந்துள்ளது. இதனால் வழக்கத்திற்கு மாறாக இந்த ஆண்டு மேட்டூர் அணை தாமதமாக திறக்கப்பட்டது.

வழக்கமாக ஜூன் 12-ந்தேதி குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து நீர் திறக்கப்படும் நிலையில், இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில்தான் அந்த மேட்டூர் அணையில் இருந்து நீர் திறக்கப்பட்டது.

நேற்று காலை மேட்டூர் அணைக்கான நீர்வரத்து 792 கன அடியாக இருந்த நிலையில், இன்று காலை நிலவரப்படி மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 787 கன அடியாக சரிந்துள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 59.58 அடியாக உள்ளது. அணையில் 24.37 டி.எம்.சி. நீர் இருப்பு உள்ளது. அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு 12,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டு வருகிறது. தொடர்ந்து சரிவை சந்தித்து வரக்கூடிய மேட்டூர் அணையின் நீர்மட்டத்தை கருத்தில் கொண்டு, டெல்டா பாசனத்திற்கான தண்ணீர் திறப்பு எப்போது வேண்டுமானாலும் நிறுத்தப்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

கடந்த செப்டம்பர் 1-ந்தேதி மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு தமிழக முதல்-அமைச்சர் விஜய் தண்ணீரை திறந்து வைத்தார். இன்று வரைக்கும் 44 டி.எம்.சி. தண்ணீர் டெல்டா பாசனத்திற்காக திறக்கப்பட்டிருப்பதாக நீர்வளத்துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

45 நாட்களுக்கு மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்ட நிலையில், 45 நாட்களுக்கான அந்த கால வரம்பு நிறைவடைய உள்ள சூழலில், அணையின் நீர்மட்டமும் சரிந்து வருவதால், அணையில் இருந்து திறக்கப்படும் நீர் எப்போது வேண்டுமானாலும் நிறுத்தப்படலாம் என்ற நிலை உருவாகியிருக்கிறது.

இதனால் சம்பா பயிரை காப்பாற்றுவதற்கு நீர் தொடர்ந்து வழங்கப்படுமா என்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### குழந்தைகளுக்கு எடை குறைப்பு மருந்து

## அறுவை சிகிச்சை வேண்டாம்: உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தல்




**ஜெனீவா, அக்.15:** 9 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் உடல் பருமனை குறைக்க எடை குறைப்பு மருந்துகளையோ அல்லது அறுவை சிகிச்சையையோ நாட வேண்டாம் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தலை வழங்கியுள்ளது

தீவிரமாகும் உடல் பருமன் ஆபத்து: ஒரு குழந்தையின் வயது மற்றும் உயரத்திற்கு ஏற்ற ஆரோக்கியமான எடையைவிட, கூடுதல் எடை இருப்பது 'ஒபிசிட்டி' எனப்படும் தீவிர உடல்நல பாதிப்பாக கருதப்படுகிறது. சமீபகாலமாக சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இந்த உடல் பருமன் பிரச்சனையால் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

### குழந்தைகளின் இந்த திடீர் எடை அதிகரிப்புக்கு முக்கிய காரணங்களாக கூறப்படுபவை:

அதிக சர்க்கரை சேர்க்கப்பட்ட குளிர்பானங்கள், துரித உணவுகள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகள், அதிகப்படியான கலோரிகள் கொண்ட உணவு முறை.

போதிய உடற்பயிற்சி இல்லாமை: விளையாடும் வயதில் குழந்தைகள் மைதானத்திற்கு சென்று விளையாடுவதை குறைத்துக்கொண்டு, எப்போதும் செல்போன் பார்க்கும் பழக்கம் அதிகரித்ததே இந்த பிரச்சனைக்கு முக்கிய காரணமாக உருவெடுத்துள்ளது.

இதற்காக பெற்றோர் பலர் மருத்துவர்களையும், மருந்துகளையும் நாடி ஓடுகின்றனர். இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக உலக சுகாதார நிறுவனம் சில முக்கிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது:-

9 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு எந்தவொரு எடை குறைப்பு மருந்துகளோ, அறுவை சிகிச்சையோ முற்றிலும் செய்யக்கூடாது.

அதற்கு பதிலாக, குழந்தைகளின் உணவு முறை மற்றும் உடற்பயிற்சி போன்ற வாழ்க்கைமுறை பழக்கங்களை மாற்றுவதற்கே பெற்றோர் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

10 முதல் 19 வயது வரை உள்ள டீன்-ஏஜ் பருவத்தினருக்கு, கடுமையான உடல் பருமனுடன் சேர்த்து சர்க்கரை நோய், இன்சுலின் எதிர்ப்பு அல்லது கட்டுப்படுத்த முடியாத உயர் ரத்த அழுத்தம் போன்ற தீவிர பாதிப்புகள் இருந்தால் மட்டுமே மருத்துவர்களின் ஆலோசனைப்படி மருந்து அல்லது அறுவை சிகிச்சையை தேர்ந்தெடுக்கலாம்.

### ஆரோக்கியமான வாழ்வியல் முறை:

உயரத்திற்கு ஏற்ற உடல் எடையை பராமரிப்பதன் மூலம் மட்டுமே உடல் பருமன், சர்க்கரை நோய் மற்றும் உயர் ரத்த அழுத்தம் போன்ற பாதிப்புகளில் இருந்து தப்பிக்க முடியும் என்பதால், குழந்தைகளுக்கு ஆரோக்கியமான வாழ்வியல் முறையை கற்றுக்கொடுப்பதே சிறந்தது என்று சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

### நீதிமன்றத் தடையால் தேர்தல் தள்ளிப்போய் உள்ள

## விராலிமலை, கரூர், திருச்சி கிழக்கு தொகுதிகளில் இடைத்தேர்தலுக்கு தயாராகும் கட்சிகள்

**சென்னை, அக்.15:** மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் தவெக சார்பில் போட்டியிட்டு மரகதம் குமரவேல், சத்யபாமா வெற்றி பெற்றுள்ள நிலையில், விராலிமலை, கரூர் தொகுதிகளில் முன்னாள் அதிமுக எம்எல்ஏக்களான விஜயபாஸ்கர்களும், அதே எதிர்பார்ப்புடன் இடைத்தேர்தல் பணிகளைத் தொடங்கியுள்ளனர்.




விட்டதை பிடிக்க திமுகவும், சரிந்த செல்வாக்கை மீட்க அதிமுகவும் தீவிரமாக களம் இறங்க தயாராகி வருகின்றன. கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக சார்பில் வெற்றி பெற்று, எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்து விட்டு தவெகவில் இணைந்த மரகதம் குமரவேல், சத்யபாமா ஆகியோர் இடைத்தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றனர்.

இதையடுத்து, நீதிமன்றத் தடையால் தேர்தல் தள்ளிப்போய் உள்ள விராலிமலை, கரூர், திருச்சி கிழக்கு உள்ளிட்ட தொகுதிகளிலும் அரசியல் கட்சிகள் தேர்தல் பணிகளை முடுக்கிவிட்டுள்ளன.

விராலிமலையில் தவெக சார்பில் போட்டியிட சீட் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் சி.விஜயபாஸ்கர் தினந்தோறும் மக்களைச் சந்தித்து வருகிறார். முதல்வர் விஜய்யைப் புகழ்ந்து அவர் பேசிய வீடியோவும் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

திமுக தரப்பில் மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் அல்லது பழனியப்பன் ஆகிய இருவரில் ஒருவர்தான் வேட்பாளர் என்கிறார்கள். அதிமுக சார்பில் மாவட்டச் செயலாளர் பழனிவேல், துணைச் செயலாளர் நல்லூர் கருப்பையா அல்லது முன்னாள் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சிவசாமி ஆகியோரில் ஒருவர் போட்டியிடுவார் என கூறப்படுகிறது.

கரூரில் தவெக சார்பில் போட்டியிட தனக்கு நிச்சயம் வாய்ப்பு கிடைக்கும் என்றும், அப்போது நிச்சயம் வெற்றி பெற முடியும் என்றும் எம்.ஆர்.விஜயபாஸ்கர் உறுதியுடன் உள்ளார்.

அதேபோல, கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த சம்பவத்தில் கட்சிக்காக பல்வேறு சங்கடங்களை சந்தித்துள்ளதால் தனக்கு கட்சித் தலைமை மீண்டும் வாய்ப்பு தரும் என தவெக மாவட்டச் செயலாளர் மதியழகனும் நம்பிக்கையுடன் உள்ளார்.

அங்கு அதிமுக சார்பில் மாவட்டச் செயலாளர் கமலக்கண்ணன் தலைமையில் தேர்தல் பணிகள் தொடங்கியுள்ளன. அவரே வேட்பாளராக நிறுத்தப்படலாம் எனக் கூறப்படும் நிலையில், தொகுதி முழுவதும் செயல்வீரர்கள் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

திமுக தரப்பில் செந்தில் பாலாஜி தேர்தல் பணிகளைக் கவனிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. திருச்சி கிழக்கு தொகுதியை பொறுத்தவரை கு.ப.கிருஷ்ணனின் மகன் சிரஞ்சீவி கடந்த தேர்தலிலேயே விஜய்க்கு மாற்று வேட்பாளராக மனு தாக்கல் செய்திருந்தார்.

விஜய்யின் வெற்றிச் சான்றிதழை அவர்தான் பெற்றுக்கொண்டார். அதனால் அவருக்கே வாய்ப்பு கிடைக்கலாம் என்கிறார்கள். மேலும், முன்னாள் அமைச்சர் வெல்லமண்டி நடராஜன், 2016-ல் இந்த தொகுதியில் வெற்றி பெற்று அமைச்சராக இருந்தார். அதனால் அவரது மகன் ஜவஹருக்கு இந்த தொகுதியை கேட்கிறார்.

இதேபோல, முதல் முதலில் திருச்சியில் ரசிகர் மன்றம் தொடங்கிய ஆர்.கே.ராஜா, தற்போதைய மாவட்டச் செயலாளர் குடமுருட்டி கரிகாலன் ஆகியோரும் சீட் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இப்போதே தொகுதியை வலம் வரத் தொடங்கிவிட்டனர்.

திமுக சார்பில் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, இனிகோ இருதயராஜ் அல்லது புதுமுகம் நிறுத்தப்படலாம் எனத் தெரிகிறது. அதிமுக சார்பில் ஆவின் கார்த்திகேயன், மனோகரன் ஆகியோரில் ஒருவர் போட்டியிடலாம் என்றும், அமமுக பொதுச்செயலாளர் டிடிவி.தினகரன் களமிறங்க வாய்ப்புள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

மதுராந்தகம், தாராபுரம் வெற்றியைத் தொடர்ந்து மத்திய மண்டலத்தில் உள்ள இந்த 3 தொகுதிகளிலும் வெற்றி தங்களுக்கே என தவெகவினரும், கடந்த பொதுத் தேர்தலில் வாங்கிய வாக்குகளை இடைத்தேர்தலில் கூட்டணி கட்சிகள் தயவு இல்லாமல், தக்க வைத்துக் கொண்டதால், இன்னும் சற்று கடுமையாக உழைத்தால் வெற்றிக்கனியை பறித்து விடலாம் என்ற நம்பிக்கையில் திமுகவினரும், சரிந்த செல்வாக்கை இந்த இடைத்தேர்தல்களில் தூக்கி நிறுத்தினால்தான் எதிர்காலம் உள்ளது என்ற உறுதியில் அதிமுகவினரும் காத்திருக்கின்றனர்.

### வணிகச் செய்திகள்

## ரப்பர் விலை கிடுகிடு உயர்வு... குவிண்டால் ரூ.4,000

**குமரி, அக்.15:** குமரி மாவட்டத்தில் முக்கிய வேளாண் சார்ந்த உற்பத்தி பொருளான ரப்பரின் விலை கடந்த பல ஆண்டுகளில் இல்லாத வகையில் அதிகரித்து வருகிறது. தென்னிந்தியாவில் முக்கிய ரப்பர் உற்பத்தி மாநிலமான கேரளத்திலும் தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டத்திலும் செப்டம்பர் மாதம் இயல்புக்கு மாறாக கடும் வெயில் நிலவி வருகிறது.

இதனால் ரப்பர் மரங்களில் பால் உற்பத்தி குறைவாக உள்ளது. இதில் குறிப்பாக மாவட்டத்தில் கடந்த 2 வாரங்களுக்கு முன்பு வெயிலின் தாக்கத்தால் ரப்பர் பால் உற்பத்தி 30 சதவீதம் வரை குறைந்து காணப்பட்டது. இந்த நிலையில் மலையோரப் பகுதிகளில் அவ்வப்போது மிதமான சாரல் மழை பெய்து வரும் நிலையில் பால் உற்பத்தி சற்று அதிகரித்துள்ளது. இந்த நிலையில், இயற்கை ரப்பர் விலை குவின்டாலுக்கு (100 கிலோ) ரூ.4,000 உயர்ந்துள்ளது.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது:-

நம் நாட்டில் கிட்டத்தட்ட 90 சதவீதம் ரப்பர் கேரளத்தில் விளைவிக்கப்பட்டாலும், தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டத்தில், 28,000 ஹெக்டேரில் ரப்பர் சாகுபடி செய்யப்படுகிறது. விளவங்கோடு, கல்குளம், தோவாளை ஆகிய தாலுகாக்களில் சாகுபடி செய்யப்படுகிறது. வழக்கமாக ரப்பர், குவின்டால் ரூ.17,000 ரூ.18,000-க்கு விற்பனையாகும். மழை அதிகம் பெய்யும் அக்., நவ., மாதங்களில் மரங்களில் ரப்பர் பால் வடிவது குறைவாக இருக்கும். அதனால் மழைக்காலங்களில் வழக்கத் தைவிட விலை உயர்ந்து குவின்டால் ரூ.24,000 வரை விற்பனையாகும்.

ஆனால், இந்த முறை ரூ.27,000 முதல் ரூ30,000 வரை விலை உயர்ந்துள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## கூட்டுறவு அங்காடிகளில் ரூ.50க்கு அரிசி

**சென்னை, அக்.15:** கூட்டுறவு மற்றும் உணவுத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

இந்திய உணவுக் கழகம் மற்றும் பிற மாநிலங்களில் இருந்து சன்ன ரக அரிசியைக் கொள்முதல் செய்து, கூட்டுறவு அங்காடிகளில் கிலோ ரூ.40 முதல் ரூ.50 வரை விற்பனை செய்வது தொடர்பாக தமிழக அரசு பரிசீலித்து வருகிறது. இதற்காக, எந்தெந்த மாநிலங்களில் அரிசி கிடைக்கும், எவ்வளவு அளவு கொள்முதல் செய்ய முடியும் என்பது குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இதில், 1 லட்சம் டன் அரிசி கிடைப்பது உறுதி செய்யப்பட்டால், கூட்டுறவு அங்காடிகளில் குறைந்த விலையில் அரிசியை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

சிகரத்தின் தினத்தென்றல்


APPROVED CMDA No. 249/2023

APPROVED RERA APPROVED




VM Residential Plots

# KUMARAN HIGHWAY CITY

## KUTHAMBAKKAM, POONAMALLEE




| PLOT NO | EXTENT SQ.FT | PLOT NO | EXTENT SQ.FT |
|---|---|---|---|
| 1 | 1402 | 41 | 972 |
| 2 | 938 | 42 | 972 |
| 3 | 944 | 43 | 960 |
| 4 | 938 | 44 | 948 |
| 5 | 941 | 45 | 960 |
| 6 | 944 | 46 | 960 |
| 7 | 947 | 47 | 627 |
| 8 | 953 | 48 | 816 |
| 9 | 959 | 49 | 934 |
| 10 | 969 | 50 | 1080 |
| 11 | 981 | 51 | 1188 |
| 12 | 975 | 52 | 948 |
| 13 | 938 | 53 | 960 |
| 14 | 950 | 54 | 640 |
| 15 | 950 | 55 | 1678 |
| 16 | 950 | 56 | 1449 |
| 17 | 950 | 57 | 1031 |
| 18 | 950 | 58 | 630 |
| 19 | 950 | 59 | 681 |
| 20 | 950 | 60 | 693 |
| 21 | 950 | 61 | 693 |
| 22 | 950 | 62 | 693 |
| 23 | 950 | 63 | 489 |
| 24 | 950 | 64 | 384 |
| 25 | 1518 | 65 | 600 |
| 26 | 1309 | 66 | 600 |
| 27 | 1000 | 67 | 600 |
| 28 | 1000 | 68 | 588 |
| 29 | 1000 | 69 | 588 |
| 30 | 1000 | 70 | 600 |
| 31 | 1000 | 71 | 600 |
| 32 | 1000 | 72 | 495 |
| 33 | 1000 | 73 | 384 |
| 34 | 1000 | 74 | 459 |
| 35 | 1000 | 75 | 682 |
| 36 | 1000 | 76 | 658 |
| 37 | 1000 | 77 | 642 |
| 38 | 1000 | Commercial 1 | 4637 |
| 39 | 988 | Commercial 2 | 10148 |
| 40 | 777 | | |

## INDUSTRIAL PRESENCE AND DEVELOPMENT CLOSER TO THE LAND

NISSAN · HYUNDAI · SAINT-GOBAIN GLASS · apollo · SAMSUNG · PERLOS · FOXCONN · JABIL · caparo · NOKIA Connecting People · DELL · MOTOROLA · FLEXTRONICS

# Valli Mayil Properties

130/4B, Redhills Road, 1st Floor, Pudur, Ambattur, Chennai-53.

muthaiah.kvb@gmail.com

www.vallimayilproperties.com

Contact

9080420748

## மிகக் குறைந்த விலையில்

# உலகத்துக்கு மருந்துகளை வழங்குகிறது இந்தியா: பிரதமர் மோடி பெருமிதம்!



**புதுடில்லி, அக்.15:** மிகக் குறைந்த விலையில் ஒட்டு மொத்த உலகத்துக்கும் இந்தியா மருந்துகளை வழங்கி வருகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த புளூம்பர்க் நிறுவனம் நிதிச் சேவை, மென்பொருள், ஊடகம் என பல்வேறு துறைகளில் கால் பதித்து உள்ளது. இந்த நிறுவனம் சார்பில் கடந்த 2018-ம் ஆண்டில் "புளூம்பர்க் புதிய பொருளாதார மன்றம்" உருவாக்கப்பட்டது. இந்த மன்றத்தின் சார்பில் ஆண்டுதோறும் சிறப்பு மாநாடு நடத்தப்படுகிறது. சிங்கப்பூர், பெய்ஜிங் உள்ளிட்ட நகரங்களில் மாநாடு நடைபெறுவது வழக்கம். முதல்முறையாக டெல்லியில் புளூம்பர்க் மாநாடு நேற்று தொடங்கியது. இதில் உலகம் முழுவதும் இருந்து 500-க்கும் மேற்பட்ட பொருளாதார நிபுணர்கள் பங்கேற்று உள்ளனர்.

முதல் நாள் மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது: 21-ம் நூற்றாண்டில் தொழில்நுட்பம், தரவுகள், அறிவு, புதுமை கண்டுபிடிப்புகள் ஆகியவையே ஒரு நாட்டின் பலத்தை தீர்மானிக்கின்றன. இந்த 4 துறைகளிலும் இந்தியா முன்னோடியாக விளங்குகிறது. கடந்த 2014-ம் ஆண்டுக்கு முன்பு இந்தியாவில் 100 ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மட்டுமே இருந்தன. தற்போது 2.5 லட்சத்துக்கும் அதிகமான நிறுவனங்கள் செயல்படுகின்றன. சுமார் 45 சதவீத நிறுவனங்களை பெண்கள் தலைமை ஏற்று நடத்துகின்றனர்.

பல்வேறு சமூகநலத் திட்டங்கள் மூலம் நாடு முழுவதும் 25 கோடி பேரை வறுமைக் கோட்டில் இருந்து மீட்டு உள்ளோம். இது மிகப்பெரிய சாதனை ஆகும். மக்களின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக மானிய நிதி வழங்கப் படுகிறது. இன்றைய உலகத்தில் புதிது, புதிதாக பிரச்சினைகள் உருவாகி வருகின்றன. இதனால் எரிசக்தி, அரியவகை கனிமங்களுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்படுகிறது. இந்த பிரச்சினைகளை இந்தியா திறம்பட சமாளித்து வருகிறது.

நாடு முழுவதும் சூரிய மின் உற்பத்தி கணிசமாக அதிகரித்து வருகிறது. மிகக் குறைந்த விலையில் ஒட்டுமொத்த உலகத்துக்கும் இந்தியா மருந்துகளை வழங்கி வருகிறது. கரோனா காலத்தில் 100-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு தடுப்பூசிகள், மருந்துகளை விநியோகம் செய்தோம். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.8 சதவீதத்தை எட்டி உள்ளது. நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு 700 பில்லியன் டாலராக உள்ளது. கடந்த கால தவறுகளை திருத்தி பல்வேறு பொருளாதார சீர்திருத்தங்களை அமல்படுத்தி வருகிறோம்.

இதனால் நாட்டின் பொருளாதாரம் அதிவேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. செயற்கை நுண்ணறிவு துறையில் இந்தியா முன்னோடியாக விளங்குகிறது. இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

# டில்லி போராட்டம்: உச்ச நீதிமன்றத்தில் இன்று விசாரணை

**புதுடில்லி, அக்.15:** ஞானேஷ் குமார் பதவி விலகக்கோரி டெல்லியில் நடந்த போராட்டத்தின் போது காவல்துறை அத்துமீறல்கள் தொடர்பாக பல்வேறு வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. அந்த வழக்குகள் தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான அமர்வில் நேற்று விசாரணை நடைபெறவிருந்த நிலையில், நீதிபதி வி. மோகனா விடுமுறை எடுத்ததால் வழக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டது தொடர்பாக அதிகாரிகள் மீது அவமதிப்பு நடவடிக்கை எடுக்க கோரிய வழக்கு, வழக்கறிஞர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டதாகவும் கூறப்படும் புகார்கள் தொடர்பாக வழக்குகளில் மத்திய அரசு பதில் மனு தாக்கல் செய்வதற்கான கால அவகாசத்தையும் நீதிமன்றம் வழங்கி உள்ளது. போராட்டங்கள் தொடர்பான வழக்குகளின் விசாரணையை இன்று (15-ல்) உச்ச நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

# கோயில்களில் செல்போன் கொண்டு செல்ல தடை நீக்கம்!

## இந்து சமய அறநிலையத் துறை உத்தரவு



**சென்னை, அக்.15:** கோயில்களுக்கு வரும் பக்தர்கள் தங்களது செல்போன்களைப் பாதுகாப்பு மையத்தில் ஒப்படைக்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்தக் கூடாது என்று இந்து சமய அறநிலையத் துறை அலுவலர்களுக்கு உயர் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். இதனால், கோயில்களுக்குள் செல்போன் கொண்டு செல்வது தொடர்பான கட்டுப்பாடுகளில் தளர்வு அளிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தமிழகத்தில் உள்ள கோயில்களின் மரபுகள், வழிபாட்டு முறைகள் மற்றும் புனிதத் தன்மையைப் பாதுகாக்கும் நோக்கில் பல்வேறு கட்டுப்பாடுகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, கோயில்களுக்குள் செல்போன்கள் கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டு, பக்தர்கள் தங்களது செல்போன்களை நுழைவுப் பகுதியில் உள்ள பாதுகாப்பு மையங்களில் ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டனர்.

இதற்கு சிலர் ஆதரவு தெரிவித்தாலும், பெரும்பாலான பக்தர்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். மேலும், செல்போன்களை ஒப்படைப்பது தொடர்பாக கோயில் பணியாளர்களுக்கும், பக்தர்களுக்கும் இடையே அவ்வப்போது வாக்குவாதங்களும் பிரச்சினைகளும் ஏற்பட்டு வந்தன. இந்நிலையில், செல்போன்களைப் பாதுகாப்பு மையத்தில் ஒப்படைக்குமாறு பக்தர்களைக் கட்டாயப்படுத்தக் கூடாது என்று அறநிலையத் துறை உயர் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

பக்தர்கள் தாங்களாக முன்வந்து செல்போன்களை ஒப்படைக்க விரும்பினால் மட்டுமே அவற்றைப் பெற்று பாதுகாப்பு மையத்தில் வைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில், கோயில்களுக்குள் செல்போன்களை எடுத்துச் செல்லும் பக்தர்கள், மற்றவர்களின் வழிபாட்டுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் அவற்றைப் பயன்படுத்தக் கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவோரைக் கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்கவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. கோயில்களின் வழிபாட்டு அமைதியைப் பாதுகாப்பதுடன், செல்போன் கட்டுப்பாடுகளால் பக்தர்களுக்கு ஏற்படும் சிரமங்களையும் தவிர்க்கும் வகையில் இந்தத் தளர்வு அளிக்கப்பட்டுள்ளதாக அறநிலையத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# கோயில்களில் அன்னதான திட்டம் விரிவாக்கம்: பயனாளிகள் எண்ணிக்கை இரு மடங்காக உயர்வு



**சென்னை, அக்.15:** தமிழகத்தில் 10 கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அன்னதானத் திட்டத்தில் பயனாளிகளின் எண்ணிக்கையை இரு மடங்காக விரிவுபடுத்தி இந்து சமய அறநிலையத்துறை அனுமதி அளித்துள்ளது.

இதுதொடர்பாக, அறநிலையத்துறை ஆணையர் டி.ஜி. வினய் பிறப்பித்துள்ள உத்தரவு: சட்டப்பேரவை மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, கோயில்களில் செயல்படுத்தப்படும் அன்னதானத் திட்டத்தின் பயனாளிகள் எண்ணிக்கையை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கோவை மாவட்டம் பேரூர் பட்டீசுவரசுவாமி கோயில், காஞ்சி மாவட்டம் குன்றத்தூர் சுப்பிரமணியசுவாமி கோயில், திருப்பூர் மாவட்டம் சிவன்மலை சுப்பிரமணியசுவாமி கோயில் ஆகிய கோயில்களில் தற்போது நாள்தோறும் 100 பேருக்கு வழங்கப்படும் அன்னதானம், இனி 200 பேருக்கு வழங்கப்படும்.

காஞ்சி தேவராஜசுவாமி கோயிலில் 75 பேருக்கு வழங்கப்படும் அன்னதானம் 150 பேருக்கு விரிவுபடுத்தப்படுகிறது. கோவை மாவட்டம் பெரியதடாகத்தில் உள்ள அனுவாவி சுப்பிரமணியசுவாமி கோயில், பூண்டி வெள்ளியங்கிரி ஆண்டவர் கோயில், காஞ்சிபுரம் ஏகாம்பரநாத சுவாமி கோயில், சென்னை சூளையில் உள்ள அங்காள பரமேசுவரி மற்றும் காசி விஸ்வநாதசுவாமி கோயில் ஆகிய 4 கோயில்களில் 50-ல் இருந்து 100 ஆக உயர்த்தப்படுகிறது.

மேலும், ஈரோடு மாவட்டம் சென்னிமலை சுப்பிரமணிய சுவாமி கோயில் மற்றும் திருச்சி மாவட்டம் வயலூர் சுப்பிரமணியசுவாமி கோயில் ஆகியவற்றில் தற்போது நாள்தோறும் 100 பேருக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

இந்தக் கோயில்களில் செவ்வாய்க்கிழமை, கிருத்திகை, வளர்பிறை சஷ்டி, அமாவாசை, பங்குனி உத்திரம், தைப்பூசம் உள்ளிட்ட முக்கிய நாட்களில் 200 பேருக்கு அன்னதானம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இதற்கிடையே, குன்றத்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் அன்னதான விரிவாக்க திட்டத்தை அமைச்சர் ரமேஷ் தொடங்கி வைத்து பக்தர்களுக்கு உணவு பரிமாறினார்.

## தனியார் மருத்துவக் கல்லூரிகளில்

# மாணவர்களிடம் 4 ஆண்டுகளுக்குப் பிறகும் கட்டணம் வசூலித்தால் நடவடிக்கை: அமைச்சர் எச்சரிக்கை



**காஞ்சிபுரம், அக்.15:** காஞ்சிபுரம் மாவட்ட மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை உள்ளிட்ட இடங்களில் பணயாற்ற தேர்வு செய்யப்பட்ட 201 செவிலியர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கும் விழா காஞ்சிபுரத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் அருண்ராஜ் பேசியதாவது: கடந்த ஆட்சிக் காலத்தில் தீர்க்கப்படாத செவிலியர் பற்றாக்குறை பிரச்சினை, முழுமையாக முறைப்படுத்தப்பட்டு, தற்போது மாநிலம் முழுவதும் 4,724 செவிலியர் பணியிடங்கள் வெளிப்படையான முறையில் நிரப்பப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம் மாவட்டம் காரப்பேட்டையில் உள்ள அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை, புற்றுநோய் சிகிச்சைக்கான மாநில சிறப்பு மருத்துவ நிறுவனமாக ரூ.16.06 கோடி மதிப்பீட்டில்தரம் உயர்த்தப்பட உள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, "தனியார் மருத்துவக் கல்லூரிகள், மருத்துவ மாணவர்களிடம் 4½ ஆண்டுகளுக்கு மட்டுமே கட்டணம் வசூலிக்க வேண்டும். பயிற்சி பெறும் ஓர் ஆண்டுக்குக் கட்டணம் வசூலிக்கக் கூடாது.

ஒரு தனியார் கல்லூரி கூடுதல் கட்டணம் வசூலிப்பதாக புகார் வந்தது. அது தொடர்பான விசாரணையில் 15 மாணவர்கள் பெற்றோருடன் ஆஜராகி விளக்கம் அளித்துள்ளனர்.

இதுபோல் கட்டணம் வசூலித்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். இடதுசாரிகள் ஊழலற்ற ஆட்சியை விரும்புவர். அது போன்ற ஆட்சியைத்தான் தமிழக அரசு கொடுத்து வருகிறது. அதனால் அவர்களுக்கும் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

அதிமுக பொதுச் செயலர் பழனிசாமி அதிமுகவை ஒரு கட்சி போல் நடத்தாமல் கம்பெனி போல் நடத்துகிறார்" என்றார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் எஸ்.பி.கே. தென்னரசு, ஆர்.வி.ரஞ்சித்குமார், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் வ.லோகநாயகி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## நடப்பாண்டு சீசன் முடிவு

# தூத்துக்குடி மாவட்டத்தில் 16 லட்சம் டன் உப்பு தேக்கம்!



**தூத்துக்குடி, அக்.15:** தூத்துக்குடி மாவட்டத்தில் நடப்பு ஆண்டுக்கான உப்பு சீசன் முடிவுக்கு வந்துள்ளது. சுமார் 20 லட்சம் டன் உப்பு உற்பத்தியான நிலையில், அதில் 16 லட்சம் டன் உப்பு விற்பனையாகாமல் தேங்கியுள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் வேம்பார், தூத்துக்குடி, முத்தையாபுரம், முள்ளக்காடு, ஆறுமுகநேரி பகுதிகளில், 20 ஆயிரம் ஏக்கரில் உப்பளங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 30 ஆயிரம் தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். நாட்டின் உப்பு உற்பத்தியில் குஜராத் மாநிலத்துக்கு அடுத்தபடியாக தூத்துக்குடி மாவட்டம் உள்ளது.

இங்கு ஜனவரி மாதம் உப்பு உற்பத்திக்கான பணிகள் தொடங்கும். ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையான 6 மாதங்கள் உப்பு உற்பத்திக்கான உச்சகட்ட காலம். அக்டோபர் மாதம் வடகிழக்கு பருவமழை தொடங்கியதும் உப்பு சீசன் முடிவடையும்.

நடப்பு ஆண்டில் எல்நினோ தாக்கம் காரணமாக தூத்துக்குடி மாவட்டத்தில் மார்ச் மாதம் தொடங்கி, கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை வெயில் உக்கிரமாக இருந்தது. இதனால் உப்பு உற்பத்தி அதிகமாக நடைபெற்றது.

இந்நிலையில், கடந்த 3 நாட்களாக பெய்து வரும் மழை மற்றும் வடகிழக்கு பருவமழை ஓரிரு நாட்களில் தொடங்கும் என்ற எதிர்பார்ப்பு காரணமாக, உப்பு உற்பத்தி சீசன் முடிவுக்கு வந்துள்ளது.

கடந்த 7 மாதங்களாக உற்பத்தி செய்யப்பட்ட உப்பை மழையில் இருந்து பாதுகாக்கும் வகையில், உப்பளங்களில் உள்ள உப்பு குவியல்களை பிளாஸ்டிக் ஷீட் போட்டு தொழிலாளர்கள் மூடி வைத்துள்ளனர். வடகிழக்கு பருவமழை முழுமையாக முடிவடைந்த பிறகே, அடுத்த சீசனுக்கான பணிகள் தொடங்கும்.

இது குறித்து தூத்துக்குடி சிறிய அளவு உப்பு உற்பத்தியாளர் சங்க முன்னாள் செயலாளர் ஏ.ஆர்.ஏ.எஸ்.தனபாலன், செய்தியாளரிடம் கூறியதாவது:

மாவட்டத்தில் நடப்பு ஆண்டுக்கான உப்பு உற்பத்தி முடிவுக்கு வந்துள்ளது. கடந்த ஆண்டு மாவட்டத்தில் 72 சதவீதம் (18 லட்சம் டன்) தான் உப்பு உற்பத்தி இருந்தது. இந்த ஆண்டு 80 சதவீதம் வரை, அதாவது சுமார் 20 லட்சம் டன் உப்பு உற்பத்தியாகியுள்ளது.

ஆனால், சுமார் 4 லட்சம் டன் உப்பு மட்டுமே இதுவரை விற்பனையாகியுள்ளது. 16 லட்சம் டன் உப்பு உப்பளங்களிலேயே தேங்கியுள்ளது. சில உப்பளங்களில் கடந்த ஆண்டு உற்பத்தியான உப்பு கூட இருப்பில் உள்ளது. குஜராத் உப்பு வருகையால் தூத்துக்குடி மாவட்ட உப்புக்கான விற்பனை மார்க்கெட் வெகுவாக குறைந்துவிட்டது. விலையும் குறைந்துள்ளது.

கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்தில் ஒரு டன் உப்பு ரூ.2,500 வரை விலைபோன நிலையில், தற்போது ரூ.1,500-க்கும் குறைவாகவே விற்பனையாகிறது. வழக்கமாக உப்பு உற்பத்தி சீசன் ஜனவரி மாதம் தொடங்கும் நிலையில், அடுத்த ஆண்டு மார்ச் மாதம் தொடங்கினால் கூட பரவாயில்லை. கையிருப்பில் இருக்கும் உப்பு கொஞ்சமாவது விற்பனையாகும் என்ற நிலையில்தான் உற்பத்தியாளர்கள் இருக்கின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# திருமலையிலும் எல் நினோ பாதிப்பு: 90 நாட்களுக்கு மட்டுமே தண்ணீர் இருப்பு



**திருமலை, அக்.15:** திருமலையிலும் எல்நினோ பாதிப்பு காணப்படுகிறது. உஷ்ண நிலை அதிகரிப்பதாலும், போதிய மழை இல்லாததாலும் இந்த ஆண்டு தண்ணீர் இருப்பு வெகுவாக குறைந்து காணப்படுகிறது.

திருமலையில் 7,500 வாடகை அறைகள் பக்தர்களுக்கு தினமும் வழங்கப்படுகிறது. மேலும் 5 பிரசி சத்திரங்களும் உள்ளது. இவை தவிர பொது கழிவறைகள் உள்ளன. இதனால் தினமும் சுமார் 60 லட்சம் கன அடி தண்ணீர் திருமலையில் உபயோகப்படுத்தப்படுகிறது.

இதில் பாபவிநாசம் அணையில் இருந்து 15 லட்சம் கன அடி, கோகர்பம் அணையில் இருந்து 15 லட்சம் கன அடி, திருப்பதியில் உள்ள கல்யாணி அணையில் இருந்து 30 லட்சம் கன அடி நீர் திருமலைக்கு அனுப்பப்படுகிறது.

திருமலையில் உள்ள பாபவிநாசம், ஆகாச கங்கை, கோகர்பம் அணை, குமார தாரா, பசுபு தாரா அணைகளில் இருந்து தண்ணீர் விநியோகம் நடைபெறுகிறது. இவற்றில் குமார தாரா, பசுபுதாராவில் தண்ணீர் மிகவும் வற்றி விட்டது.

தற்போது கோகர்பம் மற்றும் பாபவிநாசம் அணைகளில் சிறிதளவு தண்ணீர் இருப்பு உள்ளது. இந்த தண்ணீரும் வெறும் 90 நாட்களுக்கு மட்டுமே வரும் என உயர் அதிகாரிகளுக்கு நீர்வளத்துறையினர் தகவல் தெரிவித்துள்ளனர்

# சென்னை உயர் நீதிமன்றத்துக்கு புதிதாக 2 நீதிபதிகள் நியமனம்: குடியரசுத் தலைவர் உத்தரவு

**சென்னை, அக்.15:** சென்னை உயர் நீதிமன்றத்துக்கு புதிதாக 2 நீதிபதிகளை நியமித்து குடியரசுத் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் மொத்தம் உள்ள 75 நீதிபதி பணியிடங்களில் தற்போது தலைமை நீதிபதியுடன் சேர்த்து 66 நீதிபதிகள் பணியில் உள்ளனர். 9 நீதிபதி பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில் சென்னை தொழிலாளர் நல நீதிமன்றத்தில் முதன்மை நீதிபதியாகப் பணியாற்றி வரும் டி.லிங்கேஸ்வரன் மற்றும் சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றி வரும் பி.கார்த்திகேயன் ஆகியோரை சென்னை உயர் நீதிமன்றத்தின் புதிய நீதிபதிகளாக நியமித்து குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உத்தரவிட்டுள்ளார்.




சிகரத்தின்

# தினத் தென்றல்

RNI: NO TNTAM/2013/55872 Postal R.No: TN/CC(S)DN/525/15-17

E.MAIL: dhinathendral@gmail.com Ph:044 - 79690504, 98400 83174

உடனடி செய்திகளுக்கு...
WWW
www.sigaramnews.com

## சென்னை உயர் நீதிமன்றத்துக்கு
## புதிய நீதிபதிகள் நியமனம்: முதல்வர் விஜய் வாழ்த்து




**சென்னை, அக்.15:** "நீதித்துறையின் மிக உயர்ந்த மரபையும், கண்ணியத்தையும் கொண்ட சென்னை உயர் நீதிமன்றத்தில் பணியாற்றும் வாய்ப்பைப்பெற்றுள்ள கூடுதல் நீதிபதிகளின் பணி சிறக்கட்டும்," என முதல்வர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், "மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்திற்கு கூடுதல் நீதிபதிகளாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தர்மலிங்கம் லிங்கேஸ்வரன், பாலதண்டாயுதம் கார்த்திகேயன் ஆகியோருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

நீதியின் மாண்பையும், அரசியலமைப்பின் விழுமியங்களையும் பாதுகாக்கும் வகையில், நீதித்துறையின் மிக உயர்ந்த மரபையும், கண்ணியத்தையும் கொண்ட சென்னை உயர் நீதிமன்றத்தில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ள தங்களின் பணி சிறக்கட்டும்" என்று முதல்வர் விஜய் கூறியுள்ளார்.

## ஆசிரியர்களுக்கான சிறப்பு
## 'டெட்' தேர்வில் 1.10 லட்சம் பேர் தோல்வி

**சென்னை, அக்.15:** மத்திய அரசின் கட்டாய கல்வி உரிமை சட்டத்தின் படி, அனைத்து வகை பள்ளிகளிலும் இடைநிலை, பட்டதாரி ஆசிரியர் பணியில் சேர, ஆசிரியர் தகுதித் தேர்வு எனும், 'டெட்' தேர்வில் தேர்ச்சி பெறுவது கட்டாயமாகும்.

கட்டாய கல்வி உரிமை சட்டத்தை அமல்படுத்துவதற்கு முன் பணியில் சேர்ந்த ஆசிரியர்களும், 'டெட்' தேர்வு எழுதுவது கட்டாயம் என, சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. இதை எதிர்த்து, தமிழக அரசு சார்பில் தொடரப்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இதனிடையே ஆசிரியர்களின் நலனுக்காக, தமிழக அரசின் சார்பில், ஆண்டுக்கு மூன்று சிறப்பு 'டெட்' தேர்வுகள் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, அரசு பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கும், நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும், கடந்த ஜூலை மாதம் சிறப்பு தகுதித் தேர்வை ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தியது.

இடைநிலை பட்டதாரி ஆசிரியர்களுக்கான முதல் தாள் தேர்வை 58,902 பேர் எழுதினர். பட்டதாரி ஆசிரியர்களுக்கான இரண்டாம் தாள் தேர்வை 1,58,617 பேர் எழுதினர். 150 மதிப்பெண்களுக்கு தேர்வு நடைபெற்ற நிலையில் தகுதி மதிப்பெண்ணாக, பொதுப் பிரிவினருக்கு 90, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு 75, எஸ்.சி., எஸ்.டி.. பிரிவினருக்கு 60 மதிப்பெண் நிர்ணயம் செய்யப்பட்டது.

இந்நிலையில், பணிபுரியும் ஆசிரியர்களுக்கான சிறப்பு டெட் தேர்வு முடிவுகள் நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியிடப்பட்டது.

இதில், டெட் முதல் தாள் தேர்வில் 47,594 பேர், இரண்டாம் தாள் தேர்வில், 60,732 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். முதல் மற்றும் இரண்டாம் தாள் என, மொத்தமாக தேர்வு எழுதிய 2,17,519 ஆசிரியர்களில், 1,08,326 பேர் மட்டுமே தேர்ச்சி பெற்றுள்ளனர். சுமார் 1.10 லட்சம் பேர் தேர்வில் தோல்வி அடைந்துள்ளனர். சிறப்பு டெட் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள், அடுத்த 5 நாட்களில், தங்களின் தகுதி சான்றிதழ்களை HTTPS://TRB.TN.GOV.IN என்ற ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யலாம்.

## ரெயில்களில் அதிக சத்தத்துடன்
## பாடல் கேட்டால் 6 மாதம் சிறை!

### தெற்கு ரெயில்வே எச்சரிக்கை



**சென்னை, அக்.15:** ரெயில் பயணத்தின்போது, மொபைல்போனில்'ஹெட்போன்' பயன்படுத்தாமல், அதிக சத்தத்துடன் பாடல் கேட்பது, வீடியோ பார்ப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டால் 6 மாதம் வரை சிறை தண்டனை விதிக்கப்படும் என, தெற்கு ரெயில்வே எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாடு முழுவதும் தினமும் கோடிக்கணக்கான மக்கள் ரெயில்களில் பயணம் செய்கின்றனர். நீண்ட தூரப் பயணங்களின்போது சிலர் செல்போனில் பாடல்களைக் கேட்பதும், வீடியோக்களைப் பார்ப்பதும் போன்ற பழக்கங்களை கொண்டுள்ளனர். குறிப்பாக ஒருசிலர் அதிக சத்தத்துடன் பாடல்களை கேட்கின்றனர். இதனால் பயணிகள் சிலர் பாதிக்கப்படுகின்றனர்.

இதனைத் தடுக்கும் வகையில், பயணிகள் செல்போனில் பாடல்கள் கேட்கும்போதும் வீடியோக்களைப்பார்க்கும்போதும் ஹெட்போன் அல்லது இயர்போன் பயன்படுத்த வேண்டும் என்றும், தொலைபேசியில் பேசும்போது குறைந்த சத்தத்தில் பேச வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

இந்த நிலையில், ரெயில் பயணத்தின்போது, மொபைல்போனில்'ஹெட்போன்' பயன்படுத்தாமல், அதிக சத்தத்துடன் பாடல் கேட்பது, வீடியோ பார்ப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டால் 6 மாதம் வரை சிறை தண்டனை விதிக்கப்படும் என, தெற்கு ரெயில்வே எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து தெற்கு ரெயில்வே பயனாளர் ஆலோசனைக் குழு உறுப்பினர் ஜாபர் அலி கூறியதாவது:-

ரெயில் நிலையங்கள் மற்றும் ரெயில்களில் பயணிக்கும்போது, பயணியர் சிலர் தங்கள் மொபைல் போனில், ''ஹெட்போன்' பயன்படுத்தாமல், அதிக சத்தத்துடன் பாடல்கள் கேட்பது, 'ரீல்ஸ்' மற்றும் வீடியோ பார்ப்பது, 'கேம்' விளையாடுவது, போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இது சக பயணிகளுக்கு தொந்தரவை ஏற்படுத்துகிறது. இது குறித்து, பயணிகள் பலரும் புகார் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, ஜன விஷ்வாஸ் சட்டம், திருத்தப்பட்ட ரெயில்வே சட்டப் பிரிவின் கீழ், பொதுமக்களுக்கு தொந்தரவு தரும் செயல்களில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. அதன்படி, ரெயில் நிலையங்கள் மற்றும் ரெயில்களில், மொபைல்போனில்'ஹெட்போன்' பயன்படுத்தாமல், அதிக சத்தத்துடன் பாட்டு கேட்பது, வீடியோக்களை பார்ப்பது போன்ற செயல்களால் சக பயணியருக்கு தொல்லை கொடுத்தால், இனி ரூ.1,000 அபராதம் அல்லது ஆறு மாதங்கள் சிறை தண்டனை அல்லது இரண்டு தண்டனையும் சேர்த்து விதிக்கப்படும்.

இதுதொடர்பாக அனைத்து கோட்டங்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அபராதத்தை, டிக்கெட் பரிசோதகர் அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரம் கொண்ட வணிகப்பிரிவு அலுவலர்கள் வசூலிப்பார்கள். எச்சரிக்கையை மீறி தொடர்ந்து தொந்தரவு அளித்தால் ரூ.5,000 வரை அபராதம் விதிக்கப்படலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## ராதிகா நடித்த 'எனிமி ஆப் தி ஸ்மக்ளர்' படத்தின் டீசர் வெளியானது

**சென்னை, அக்.15:** இப்படம் வருகிற 30ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இந்த நிலையில், இந்தபடத்தின் டீசர் தற்போது வெளியாகி உள்ளது.

ஐ.ஆர்.எஸ். அதிகாரி இயக்கும் கிரைம் திரில்லர்: தமிழ் சினிமாவில் கிரைம் திரில்லர் கதைக்களத்தில் உருவாகும் புதிய திரைப்படம் 'எனிமி ஆப் தி ஸ்மக்ளர்' (ENEMY OF THE SMUGGLER).




இந்த படத்தை சுங்கத்துறை அதிகாரியாகப் பணியாற்றும் டி.சமயமுரளி எழுதி இயக்குகிறார். தனது சுங்கத்துறை விசாரணைகளில் கிடைத்த உண்மைச் சம்பவங்களையும், தான் எழுதிய புலனாய்வு நாவலையும் அடிப்படையாகக் கொண்டு இப்படத்தின் கதையை உருவாக்கியுள்ளார். இப்படத்தின் மோஷன் போஸ்டரை இயக்குநர் லோகேஷ் கனகராஜ் சமீபத்தில் வெளியிட்டிருந்தார்.

இப்படத்தில் சரண் சக்தி, ஜே.டி. சக்கரவர்த்தி, லால், ராதிகா சரத்குமார், மைம் கோபி, காளி வெங்கட், வினோதினி வைத்தியநாதன், பால சரவணன், ஜாபர் சாதிக், ஸ்மேகா மணிமேகலை உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

எஸ். ராம்பிரகாஷ், எஸ்.ஆர். ட்ரீம் ஸ்டூடியோஸ் சார்பில் இப்படத்தைத் தயாரிக்கிறார். சாம் டேனியல் இசையமைக்கிறார்.

உண்மைச் சம்பவங்களின் பின்னணியில் உருவாகும் இந்தப் படம், கடத்தல் உலகின் செயல்பாடுகளையும் சுங்கத்துறை விசாரணைகளையும் மையமாகக் கொண்ட கிரைம் திரில்லர் திரைப்படமாக உருவாகி வருகிறது. இப்படம் வருகிற 30ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

இந்த நிலையில், இந்தபடத்தின் டீசர் தற்போது வெளியாகி உள்ளது. உண்மை சம்பவங்களி பின்னணியில் உருவான இந்த டீசர் மக்கள் மத்தியில் கவனத்தை பெற்று வருகிறது.

## அரிசி பற்றாக்குறை காரணமாக
## ஆயுத பூஜையையொட்டி பொரி விலை உயர வாய்ப்பு



**கிருஷ்ணகிரி, அக்.15:** தமிழகம் முழுவதும் வருகிற 19-ந் தேதி ஆயுதபூஜை கொண்டாடப்பட உள்ளது. இதற்கான பூஜையில் பொரி முக்கிய இடம்பெறும். எனவே கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் பகுதியில் இரவு, பகலாக பொரி தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

கடந்த ஒரு வாரகாலமாக காவேரிப்பட்டணம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் அவ்வப்போது இடியுடன் கூடிய மழை பெய்து வந்ததால், பொரி தயாரிப்பு பணிகள் வழக்கத்தை விட சற்று தாமதமாக தொடங்கியது. இங்கு உற்பத்தி செய்யப்படும் பொரி தமிழகம் மட்டுமின்றி கர்நாடகா மற்றும் ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

தமிழகத்தில் சேலம், வேலூர், ஈரோடு, சென்னை, கோவை, தஞ்சாவூர், மதுரை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு மொத்த விற்பனைக்காக பொரி கொண்டு செல்லப்படுகிறது. அங்கிருந்து சில்லறை விற்பனையாளர்கள் மூலம் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது 100 லிட்டர் அளவு கொண்ட ஒரு மூட்டை பொரி ரூ.380-க்கு விற்பனை செய்யப்படுகிறது. சில்லறை விற்பனையில் ஒரு படி பொரி ரூ.10-க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆயுத பூஜை நெருங்கும் நிலையில் பொரிக்கான தேவை மேலும் அதிகரிக்கும் என்பதால், அதன் விலை சற்று உயரக்கூடும் என உற்பத்தியாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இது குறித்து பொரி உற்பத்தியாளர்கள் சிலர் கூறியதாவது:-

பொரி தயாரிக்க தேவையான அரிசி வடமாநிலங்களில் இருந்து கொண்டு வரப்படுகிறது. கடந்த காலங்களில் ஒரு கிலோ அரிசி ரூ.33-க்கு கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது எல் நினோ தாக்கத்தால் அரிசி பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது. எனவே பொரி தயாரிக்கும் அரிசி கிலோவுக்கு ரூ.10 அதிகரித்து ரூ.43 ஆக உயர்ந்து உள்ளது.

மூலப்பொருட்களின் விலை உயர்ந்த போதிலும், 6 கிலோ கொண்ட ஒரு மூட்டை பொரியின் விலை ரூ.380 என விலை நிர்ணயம் செய்து உள்ளோம். காவேரிப்பட்டணம் பகுதியில் தினசரி சுமார் 3 ஆயிரம் மூட்டை பொரி தயாரிக்கப்படுகிறது. கடந்த ஒரு வாரமாக சுற்றுவட்டார பகுதிகளில் அவ்வப்போது இடியுடன் கூடிய மழை பெய்ததால் தயாரிப்பு பணியை சற்று தாமதமாக தொடங்கினோம். தற்போது ஆயுதபூஜை நெருங்கி வருவதால் இரவு, பகல் பாராமல் முழு வீச்சில் பொரி தயாரித்து வருகிறோம். ஆயுதபூஜை நெருங்கும் போது பொரிக்கான தேவை அதிகரித்து, விலையில் சற்று உயர்வு ஏற்பட வாய்ப்பு உள்ளது என அவர்கள் கூறினர்.

## மிஷ்கின் - விஜய் சேதுபதியின் 'ட்ரெயின்' டிச.4-ல் ரிலீஸ்




**சென்னை, அக்.15:** மிஷ்கின் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடித்திருக்கும் படம் 'ட்ரெயின்'. கடந்த 2023-ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தப் படம் பல்வேறு காரணங்களால் வெளியாவதில் தாமதம் ஏற்பட்டு வந்தது. இந்த நிலையில், இப்படத்தின் வெளியீடு குறித்த அறிவிப்பு தற்போது வெளியாகி உள்ளது.

இது குறித்த தகவலை விஜய் சேதுபதி தனது சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அதில் அவர், 'பயணத்துக்கு தயாராகுங்கள். 'ட்ரெயின்' படம் உலகெங்கும் டிசம்பர் 4-ம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது' எனத் தெரிவித்துள்ளார்.

இந்தப் படம் குறித்து மிஷ்கின் நிகழ்ச்சி ஒன்றில் பேசும் போது, 'ரயிலை ஒவ்வொருமுறை பார்க்கும்போது ஒரு ராட்சஷ புழு தன் வயிற்றில் குட்டிகளை ஏற்றிச் சென்று வேறு ஒரு இடத்தில் துப்புவது போலிருக்கும்.

இப்படியான ஒரு பயணத்தில் ஓர் ஆயிரம் மனிதர்கள் அந்த ராட்சஷ புழுவின் வயிற்றில் ஏறி வேறு ஒரு இடத்தில் போய் இறங்குகிறார்கள். அதில் சிலர் இறக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் இருக்கும் கதாநாயகன் வாழ்க்கையை வெறுத்து தன் மனைவியின் சமாதியின் சிறிய செடி ஒன்றை வைத்துவிட்டு அந்த ரயிலில் ஏறுகிறான்.

அப்படி ஏறுபவன் அந்த புழுவின் வயிற்றில் நடக்கும் பல விஷயங்களில் அவனும் தன்னை மறந்து ஈடுபடுகிறான். அவன் மீண்டும் இறங்கும்போது அந்தப் பயணம் அவனுக்கு வாழ்க்கையை கற்றுத் தருகிறது என்பது படத்தின் முடிவு' என்று தெரிவித்திருந்தார்.

வி கிரியேஷன்ஸ் சார்பில் தாணு தயாரித்திருக்கும் இந்தப் படத்தில் விஜய் சேதுபதியுடன் ஸ்ருதி ஹாசன், நாசர், டிம்பிள் ஹயாதி, ஜெயராம், நரேன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்தப் படத்துக்கு மிஷ்கினே இசை அமைத்துள்ளார்.

## வல்லரசுகள் இடையே போட்டி
## சீனாவின் கடன்- ரூ.5,843 லட்சம் கோடி, அமெரிக்கா- ரூ.3,829 லட்சம் கோடி

**வாஷிங்டன், அக்.15:** உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடுகளான அமெரிக்கா வும், சீனாவும் அதிகரித்து வரும் கடன் சுமையைச் சமாளிக்க வேண்டிய நெருக்கடியில் உள்ளன.

சர்வதேச நாணய நிதியம் வெளியிட்ட சீனா தொடர்பான அறிக்கையில் இடம்பெற்றுள்ள 2025-ம் ஆண்டுக்கான மதிப்பீட்டின்படி, சீனாவின் அரசு, உள்ளாட்சி அமைப்புகள், குடும்பங்கள், நிறுவனங்கள் உள்ளிட்ட நிதி சாராத துறைகளின் மொத்தக் கடன் சுமார் 61.5 லட்சம் கோடி டாலராகும்.

இது அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 310 சதவீதமாகும். இந்திய மதிப்பில் சுமார் ரூ.5,843 லட்சம் கோடியாகிறது.

அதேபோல், அமெரிக்காவின் அரசுக் கடனும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அமெரிக்க அரசின் கருவூலத் தரவுகளின்படி, 2026 அக்டோபர் 8-ந்தேதி நிலவரப்படி அந்நாட்டின் மொத்த அரசுக் கடன் சுமார் 40.31 லட்சம் கோடி டாலராக இருந்தது.

இதன் இந்திய மதிப்பு சுமார் ரூ.3,829 லட்சம் கோடியாகும். அமெரிக்காவும், சீனாவும் உலக வர்த்தகத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இந்த வல்லரசு நாடுகளில் கடன் சுமை அதிகரிப்பது, நிதிச் சந்தைகள், முதலீடுகள், வட்டி செலவுகள் மற்றும் சர்வதேச வர்த்தகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்று பொருளாதார நிபுணர்கள் அஞ்சுகின்றனர்.

Owned, Printer and Published by G.SASIREKA. Published from No:28, 2nd Avenue, Ashok Nagar, Chennai-83 Printing at Annai Abirami Achagam, No. 24, Vengu Chetty Street, Punga Nagar, Chennai - 600 003. Editor: S.SENTHILKUMAR, Office: No:9, 4th Block, Veeramamunivar Street, Mogappair East, Chennai - 37.